### தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து

# தமிழ் செய்தித் தொலைக்காட்சிகள் நீக்கம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கண்டனம்!



**சென்னை, ஜூன் 10**

**தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து சில தமிழ் செய்தித் தொலைக் காட்சிகள் நீக்கப்பட்டுள் ளன.**

**அதற்கு கழக துணைப் பொதுச் செயலாளர் கனி மொழி கருணாநிதி எம்.பி. கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.**

இது குறித்து வலைதளத் தில் அவர் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

தமிழ்நாடு அரசு கேபிள் ஒளிபரப்பிலிருந்து @ NewsTamilTV24x7, @polimernews மற்றும் @TamilJanamNews ஆகி யவை நீக்கப்பட்டிருப்பது, பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பது மட்டுமின்றி ஜன நாயகத்திற்கும் எதிரான தாகும்.

அரசின் நிர்வாக திறமை யின்மையை வெளிச்ச மிட்டு காட்டும் ஊடகங் களை முடக்குவதும், மாற்றுக் கருத்துக்களை எதிர்கொள்ள முடியாமல் அது முன்வைக்கப்படும் தளங்களையே இருட்டடிப் பதும் தான் தவெக அரசு அளிக்க விரும்பும் மாற் றமா?

இவ்வாறு அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### மயிலை த.வேலு, கே.ஏழுமலை, கோ.சு.மணி முன்னிலை!

# முன்னாள் மாவட்டச் செயலாளர் தீரர் ஜெ.அன்பழகன் 6ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதி ஊர்வலம்!

## சென்னை தென் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் தலைமை!

சென்னை, ஜூன் 10

சென்னை மேற்கு மாவட்ட முன்னாள் செய லாளர் தீரர் ஜெ.அன்பழ கன் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று 1006 2026 புதன்கிழமை காலை 7 மணிக்கு தியாகராயநகர் மேட்லி சாலையில் உள்ள மனமகிழ் மன்றத்தில் அண்ணாரது திருவுருவ படத்திற்கு மலர்தூவி அஞ் சலி செலுத்தி அங்கிருந்து ஊர்வலமாக சென்று கண் ணம்மா பேட்டை சுடு காட்டில் உள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்துகிறோம்.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு, தியாக ராயநகர் மேற்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழு மலை எம்.சி, கிழக்கு பகுதி பொறுப்பாளர் கோ.சு. மணி வட்ட செயலாளர் கள் பி.மாரி, கோ.உதயசூ ரியன், ஜெ.ஜானகிராமன் ஆகியோரின் முன்னிலை யில் மாவட்ட இளைஞ ரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி தலை மையில் நடைபெறும் இந் நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் கள், தலைமை பொதுக் குழு உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர் கள் டி.கமல், தட்சன் ஹரி ஹரன், ந.மோ.முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, பி.ஜெயகுமார், மு.செல்வ குமார், ஆர்.லோகு, மு.ம.செந்தில்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, ஆர்.சக் திவேல், ஜி.பி.செந்தில்கும ரன், எஸ்.லட்சுமிகாந்தன் மற்றும்

மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், மாவ ட்ட பிரதிநிதிகள், பகுதி பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பா ளர்கள், துணை அமைப் பாளர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறு மாவட்ட இளைஞரணி அமைப்பா ளர் ராஜா அன்பழகன் எம்.சி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மின்துறை அதிகாரியை விசாரிக்காமலேயே

# செருப்பால் அடிப்பேன் என்கிறார் அமைச்சர்!

## ஜோசப் விஜய் சார்! நடவடிக்கை உண்டா?

காஞ்சிபுரம், ஜூன் 10-


காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதி யில் உள்ள மின்துறை அதிகாரி ஒருவரை அவரைப்பற்றி விசாரிக்காமலே செருப்பால் அடிப்பேன் என்று வனத்துறை அமைச்சர் ரஞ்சித்குமார் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் நாரப்பாக்கம் பகுதி யில் த.வெ.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று அமைச்சராக பொறுப்பேற்றிருப்பவர் ரஞ்சித்குமார்.

அவர் இரு தினங்களுக்கு முன்னர் அப் பகுதியில் நன்றி தெரிவிக்கும் கூட்டங்களில் பங்கேற்றார். அப்போது அங்கிருந்தவர்கள், அவரிடம் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு சொல்லொணா துயருக்குள்ளாவதாக புகார் அளித்தனர்.

ரஞ்சித்குமாரும் உடனடியாக அங்கிருந்து மின்வாரிய உயர் அதிகாரிக்கு (மேற்பார்வை பொறியாளர்) அலைபேசியில் அழைத்து மின்வெட்டு குறித்து கேட்டார். அப்போது அவர் உரையாடலை பொதுமக்களும் கேட்கும்வண்ணம்செல்போனைஸ்பீக்கரில் வைத்திருந்தார்.

அப்போது எதிர் முனையில் பேசிய அதிகாரி, தன் கட்டுப்பாட்டில் உள்ள இளம்


I'd have bit him with footwear: Min threatens to transfer EB official

அதிகாரி மீது புகார் கூறியிருக்கிறார்.

அப்போது அமைச்சர் ரஞ்சித்குமார், அந்த அதிகாரியை உடனடியாக நான் கன்னியா குமரிக்கு மாற்றிவிடுகிறேன் என்று கூறி விட்டு, பொதுமக்களை நோக்கி, ஸ்பிக்கர் போனுடன் மைக்கை நீட்டி, இப்போது அந்த அதிகாரி மட்டும் இங்கிருந்தால் அவரை நான் செருப்பால் அடித்திருப்பேன் என்று குறிப்பிட்டிருக்கிறார். (ஆங்கிலப் பத்திரிகை ஒன்றிலும் அவ்வாறு செய்தியும் வந்துள்ளது)

குற்றம் சாட்டிய அதிகாரி பற்றியும் விசாரிக் காமல், குற்றம் சாட்டப்பட்ட அதிகாரியைப் பற்றியும் விசாரிக்காமல், 'செருப்பால் அடிப் பேன்' என்று துறை அதிகாரி மீது சொல்லும் அளவு அமைச்சருக்கு அதிகாரம் உள்ளதா?

ஜோசப் விஜய் சார்; நீங்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சைதை மேற்கு பகுதி, 142வது (அ) வட்டத்தில் வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம் தலைமையில், சைதாப்பேட்டை வாணியர் தெருவில் 1000 பேருக்கு அறுசுவை உணவினை பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி வழங்கினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர்கள் களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, ஆர்.ரமேஷ், வி.பி.ஜானகிராமன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி!

# மனுக்கள் மீது அடுத்த வாரத்திற்குள் நிவர்த்தி செய்து கொடுக்கப்படும்!

## ஆஸ்டின் எம்.எல்.ஏ. உறுதி!

நாகர்கோவில், ஜூன் 10-

நாகர்கோவில் சட்ட மன்ற தொகுதி உறுப்பினர் ஆஸ்டின் எம்.எல்.ஏ. தொகுதிக் குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வீடு வீடாகச் சென்று மக் களிடம் குறை நிறைகளை கேட்டு குறைகளை கோரிக்கைகளாக பெறும் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சி நாகர்கோவில் மாநகராட் சிக்குட்பட்ட 28வது வார் டுக்கு உட்பட்ட குறுந்தெ ருவில் இருந்து தொடங்கியது. அந்த வார் டுக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் சென்று மக் களிடம் கோரிக்கை மனுக் களை பெற்றுக் கொண் டார். பின்னர் அவர் கூறியதாவது:

இந்த தொகுதி மக்கள் அதிகமான வாக்குகளை வழங்கி வெற்றி பெறச் செய்து, அவர்களுக்கு பணியாற்றக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங் கியிருந்தார்கள். மக்க உள்ள மக்கள் தங்களுக்கு என்ன தேவை என்று சொல்கின்றார்களோ, அதனை நிவர்த்தி செய்து கொடுக்கக்கூடிய பணியை மேற்கொள்ளுகின்றோம்.

இரண்டாவது மக்கள் சந்திப்பு என்ற அடிப்ப டையிலே, ஒவ்வொரு வார்டு தோறும், வாரத் திற்கு இரண்டு வார்டு என்ற அடிப்படையிலே சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை, இரண்டு நாட்கள் மாலை யிலே அந்த வார்டு பகுதி யிலே நேரடியாகத் தெருத் தெருவாக, வீடு வீடாக மக்களைச் சந்தித்து, அவ ளுடைய தேவைகளைக் கேட்டறிந்து, அதை நிவர்த்திச் செய்து கொடுக் கக்கூடிய பணியை மேற் கொள்ளப்படும். அந்த வகையிலே இன்றைக்கு நாகர்கோவில் மாநக ராட்சி 28வது வார்டு பகு தியிலே முதன்முதலாக எங்களுடைய பணியைத் தொடங்கியிருக்கின்



ளைத் தேடி வந்து, நேரடி யாக அவர்களைச் சந்தித்து, அவர்களுடைய குறை களையெல்லாம் கேட்டு, இந்த தொகுதியை ஒரு முன்மாதிரி தொகுதியாக அனைத்து வளர்ச்சிப் பணி களையும் நிறைவேற்றக் கூடிய தொகுதியாக மாற் றுவோம் என்று நாங்கள் வாக்குறுதி கொடுத்திருந் தோம்.

அந்த அடிப்படை யிலே, இரண்டு கட்டங்க ளாக மக்களைச் சந்தித்து, நேரடியாக அவரிடத்திலே மனுக்களைப் பெறக்கூ டிய திட்டங்களை வகுத்து உள்ளோம். ஒன்று, ஆறு மாதத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு வார்டு பகுதிக ளிலும், அரசு அதிகாரிகள் அனைவரையும் அழைத் துச் சென்று குறைதீர்க்கும் முகாமினை நடத்தி, நேர டியாக அந்த வார்டில் றோம்.. அடுத்த வாரத்திற் குள்ளாக, மாநகராட்சி மூலமாகவோ அல்லது சட்டமன்ற உறுப் பினர் தொகுதி மேம் பாட்டு நிதி மூலமாகவோ அல்லது அரசினுடைய சிறப்பு நிதியைப் பெற்று, அதன் மூலமாகவோ இந் தப் பகுதிக்குத் தேவை யான பணிகளை முழுமை யாகச் செய்து கொடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் மாந கராட்சி மேயர் (பொ) மேரி பிரின்சி லதா, கவுன் சிலர் அண்ணன் லட்சுமி, திமுக மாநகர செயலாளர் ஆனந்த், துணைச் செயலா ளர் ராஜன் வட்டச் செய லாளர் முத்துகிருஷ்ணன், திமுக நிர்வாகிகள் சிடி சுரேஷ், கிருஷ்ண குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



சைதை கிழக்கு பகுதி 169வது (அ) வட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு வட்ட கழக பொறுப்பாளர் சைதை ஆ.வரதன் தலைமையில், அப்பாவு நகரில் 500 பேருக்கு அறுசுவை உணவினை பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் சைதை மு.மகேஷ்குமார் வழங்கினார். இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், பகுதி கழக நிர்வாகி மு.பாக்கியலட்சுமி, மாவட்ட பிரதிநிதிகள் என்.நந்தகோபால், ஏ.மஜீத், வட்ட கழக நிர்வாகிகள் வே.கோதண்டம், டி.கண்ணன், மு.சாந்தி, கேபிள் சம்பத், கே.பி.மகேஷ், பா.செல்லபாண்டியன், ஏ.எஸ்.ரியாஸ் அகமது மற்றும் அணிகளின் மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடலூர் கி. கோவிந்தராசன்

**ஜூன் 10 (1998)**



கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.

கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.

நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.

தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.


தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, "அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மும்பை த.மு. பொற்கோ

**ஜூன் 10 (2014)**



இளம்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையில் தீவிர ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்.

மும்பையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் சென்று கொள்கை வகுப்பு நடத்த உற்சாகத்தோடு உழைத்ததன் பயனாக மும்பைத் தமிழர்களின் நண்பராய், குடும்பத்தில் ஒருவராய் மதிக்கப்பட்டவர்.

1965ல் மகாராஷ்டிராவில் தமிழர்கள் தாக்கப்பட்டபோது,அவர்களுக்காக போராடியவர். அதேநேரத்தில் பால்தாக்கரே அவர்களுடன் நட்பு வைத்திருந்தவர். அதே பால்தாக்கரே, 2002ல் ஓர் விழாவில் 'சமுதாயச் செம்மல்' என்ற பட்டம் வழங்கி பாராட்டினார். 'தமிழர் நல உரிமைக் கூட்டமைப்பு', 'தென்னகப் பயனாளிகள் கூட்டமைப்பு' ஆகிய அமைப்புகளை தொடங்கி, அதன் தலைவராக இருந்து மும்பைத் தமிழர்கள் நலனுக்காக பாடுபட்டவர்.

"த.மு. பொற்கோ அவர் மும்பை மாநகரச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில், என்னை அழைத்து பல நிகழ்ச்சிகளை நடத்தியதும், கழகத்திற்காக தேர்தல் நிதி திரட்டிக் கொடுத்ததும் என் நினைவுக்கு வருகிறது" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**